வாசகர்களே சொல்லுங்க...!

தினந்தோறும் வெளிவரும் 'நமது மலர்' பகுதியில் மக்கள் பிரச்னைகள் இடம்பெறுகிறது. உங்கள் பகுதியில் நிலவும் மக்கள் பிரச்னைகளை எங்களுக்கு தெரியியுங்கள். அவற்றுக்கு தீர்வுகாண, தினமலர் துணைநிற்கும்.

தினமலர்
நமது மலர்
23.2.2026 ○ தர்மபுரி ○ கிருஷ்ணகிரி

தொடர்புக்கு: 98423 70262
இ-மெயில் : vlrdmroff@gmail.com
அஞ்சல் முகவரி : 153, பெங்களூரு ரோடு, வேலூர் - 632 013.







தேன்கனிக்கோட்டை அருகே யானைகளால் சேதமாக்கப்பட்ட ரோஜா நாற்றுகள், வெள்ளரித்தோட்டம், விவசாயி வீட்டின் ஜன்னல்.

பயம் காட்டி சென்ற யானைகள் கூட்டம் வெள்ளரி தோட்டம், ரோஜா நாற்று சேதம்

தேன்கனிக்கோட்டை அருகே பரபரப்பு

■ தேன்கனிக்கோட்டை, பிப். 23 -

தேன்கனிக்கோட்டை அருகே மரக்கட்டா பகுதியில் நேற்று முன் தினம் இரவு 3 காட்டு யானைகள் கற்றித்திரிந்தது. இந்த யானைகள் விவசாயி நாகராஜ் (50) என்பவரது வீட்டின் அருகே சென்று ஜன்னல் கதவை உடைத்தது. அப்போது வீட்டில் இருந்த நாகராஜின் குடும்பத்தினர் வெளியே நின்ற காட்டு யானைகளை பார்த்து அச்சமடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து அந்த 3 காட்டு யானைகளும், நாகராஜ் பயிரிட்டு இருந்த 2 ஏக்கர் பரப்பளவிலான வெள்ளரி தோட்டத்தை தின்றும், கால்களால் மிதித்தும் சேதப்படுத்தியது. இதன் மதிப்பு 60 ஆயிரம் என கூறப்படுகிறது. அதேபோல அதன் அருகில் விவசாயி திம்மராயன் (42) என்பவர் நர்சரி தோட்டத்தில் நடுவை செய்வதற்காக வாங்கி வைத்திருந்த 1,700 ரோஜா நாற்றுகளை சேதப்படுத்தியது. இதன் மதிப்பு சூ. 25,000 எனக் கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அந்த காட்டு யானைகள் அங்கிருந்து மரக்கட்டா வனப்பகுதிக்குள் சென்றது.

இதுகுறித்து தேன்கனிக் கோட்டை வனத்துறையினர் நேரில் சென்று விசாரணை நடத்தினர். அப்போது விவசாயிகள் சேதமான பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். மரக்கட்டா பகுதியில் கற்றித்திரியும் மூன்று காட்டு யானைகளை கர்நாடகாவுக்கு விரட்ட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அவதி

- கும்பார அள்ளி பஞ்.ல் நீடிக்கும் அவலம்
- குடிநீர் தொட்டி பழுதாகி ஓராண்டாகுது
- தண்ணீருக்காக திண்டாடும் கிராம மக்கள்



காரிமங்கலம் யூனியன் கும்பார அள்ளி பஞ்.ல் உள்ள குடிநீர் தொட்டியின் மேற்பகுதி சேதம் அடைந்து தண்ணீர் தொட்டிக்குள் விழுந்துள்ளது.

■ காரிமங்கலம், பிப். 23

காரிமங்கலம் யூனியன் கும்பார அள்ளி பஞ். மண்டு பகுதியில் 400க்கும்அதிகமானகுடியிருப்புகள் உள்ளன. இதில் 1500க்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு பஞ். நிர்வாகம் மூலம் பஞ். அலுவலகம் முன் மேல்நிலை குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வந்தது.

கடந்த ஓராண்டுக்கு மேலாக குடிநீர் தொட்டி சேதம் அடைந்து குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேல்நிலை நீர் தேக்க தொட்டி மேற்பகுதியை சீரமைத்து குடிநீர் விநியோகத்தை முறையாக செயல்படுத்த இப்பகுதி பொதுமக்கள் பலமுறை பஞ்சாயத்து மற்றும் யூனியன் நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தும் அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் அலட்சியப் போக்குடன் இருந்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து இமுக துணைச் செயலாளர் ஒவியா முருகன், நிர் வாகிகள் காளியப்பன், சிவக்குமார் நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து குடிநீர் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

சின்னசாமி ஆகியோர் கூறியதாவது: காரிமங்கலம் யூனியன் கும்பாரஅள்ளி பஞ். மண்டு பகுதியில் மேல்நிலைப் குடிநீர் தொட்டி சேதம் அடைந்து ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் நிர்வாகம் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் குடிநீருக்காக பொது மக்கள் அல்லல்பட்டு வருகின்றனர். உடனடியாக நடவடிக்கை எடுக்கா விடில் பொதுமக்களை திரட்டி போராட்டம் நடத்த முடிவு செய் துள்ளதாக தெரிவித்தனர். மாவட்ட நிர்வாகம் உரிய கவனம் செலுத்தி சேதமடைந்த குடிநீர் மேல்நிலைத் தொட்டியை சீரமைத்து குடிநீர் வினியோகத்தை சீரான முறையில் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





பாலக்கோடு ஸ்ரீவாசவி கன்னிகா பரமேஸ்வரி கோயில் கலசத்துக்கு புனிதநீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடந்தது. (அடுத்த படம்) அம்மன் சந்தன அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

டூவீலர் திருட்டு

■ தர்மபுரி, பிப். 23-

தர்மபுரி மாவட்டம் பெரும்பாலை நிரமத்தைச் சேர்ந்தவர் பிரபுகுமார், மெடிக்கல் ரெப். இவர் தர்மபுரி ரயில்வே ஸ்டேஷன் செல்லும் சாலையில் உள்ள சென்டர் அருகே உள்ள வீட்டில் வாடகைக்கு இருந்து கொண்டு தனது பணியை செய்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த 20ம் தேதி இரவு வீட்டின் முன் தனது டூவீலரை நிறுத்திவிட்டு தூங்க சென்றார்.

மறுநாள் எழுந்து பார்த்தபோது டூவீலரை காணவில்லை. அக்கம் பக்கம் தேடி பார்த்தும் கிடைக்காத நிலையில் தர்மபுரி டவுன் போலீஸ் ஸ்டேஷனில் பிரபுகுமார் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து மர்ம நபரை தேடி வருகின்றனர்.

வாசவி கன்னிகா பரமேஸ்வரி கோயில் கும்பாபிஷேக விழா

■ பாலக்கோடு, பிப். 23-

பாலக்கோடு ஸ்ரீவாசவி கன்னிகா பரமேஸ்வரி கோயிலில், ஸ்ரீவாசவி கன்னிகா பரமேஸ்வரி, விநாயகர், பாலமுருகர், நவகிரக மூர்த்திகளுக்கும், ஸ்ரீ சீதா ராம லக்கு்மன், ஹனுமன் சமேத மூர்த்தி களுக்கும் மகா கும்பாபிஷேக விழா நேற்று முன் தினம் கணபதி பூஜையுடன் தொடங்கியது.

விழாவானது நேற்று அதிகாலை கோமாதா பூஜை, ஸ்ரீ கணபதி ஹோமம், கலச ஆராதனை, நவகிரக ஹோமம், பஞ்ச சூக்த ஹோமம், துர்கா சகஸ்ரநாமம், மகா சாந்தி ஹோமம், வேதபாராயணம் முழங்க பூர்ணா ஹுதி நடந்தது. இதைய டுத்து யாகசாலையிலிருந்து புனிதகலச தீர்த்த குடத்தை கோயில் முக்கியஸ்தர்கள் எடுத்துச்சென்று கோயில் கலசத்துக்கு புனிதநீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காட்டினர்.

பின்னர் கலசத்துக்கு ஊற்றிய புனிதநீர் பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது. இதனையடுத்து ஸ்ரீவாசவி கன்னிகா பரமேஸ்வரி சுவாமிக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள் செய்யப் பட்டு, பூக்களால் அலங்கரித்து மகா தீபாராதனை காட்டப்பட்டது. அம்மன் திறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். ஏற் பாடுகளை பாலக்கோடு ஆர்யவைஸ்ய மஹாஜனம் கமிட்டி மற்றும் விழாக் குழுவினர் செய்திருந்தனர்.

ரயில்வே பணிக்கு பயிற்சி

■ கிருஷ்ணகிரி, பிப். 23 -

கிருஷ்ணகிரி கலெக்டர் தினேஷ் குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் ஆர் ஆர்பி எனப்படும் ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியத்தால் குரூப் டி பிரிவில், 22,195 காலி பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு கல்வித்தகுதி யாக பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். https://www.rrbchennai.gov.in/ என்ற இணையதளம் மூலம் வரும் மார்ச் 2 வரை விண்ணப்பிக்கலாம். தேர்வை தமிழிலும் எழுதலாம். கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த போட்டி தேர்வர்கள் பயனடையும் வகையில் இலவச பயிற்சி வகுப்புகள் வரும், 26 முதல் வார நாட்களில் நிங்கள் முதல் வெள்ளி வரை கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடக்கிறது.

இந்த பயிற்சி வகுப்பில் பாட குறிப்புகளும், முழு மாதிரி தேர்வுகளும் நடத்தப்படும். பயிற்சி வகுப்பில் சேர விருப்பமுள்ளவர்கள் https://tinyur.com/bd-dcy2tw என்ற இணைப் பின் மூலம் தங்களை பதிவு செய்து கொள்ள லாம். மேலும் விபரங் களுக்கு, 04343 291983 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

பயன்பாடு இன்றி கிடக்குது பிஎஸ்என்எல் அலுவலகம்

பாராக மாறிய அவலம்

■ கம்பைநல்லூர், பிப். 23-

கம்பைநல்லூர் பஸ் ஸ்டாண்ட் ஒட்டி பொதுத்துறை நிறுவனமான பிஎஸ்என்எல் அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகம் பல ஆண்டுகளாக பயன்பாடற்ற நிலையில் பூட்டியே கிடக்கிறது.

பிஎஸ்என்எல் அலுவலக வரண்டா குடிமக்களின் இறந்தவெலி பார் ஆகவும், சமூக விரோதிகளின் கூடார மாகவும் இருந்து வருகிறது. இந்த கட்டடத்தை அரசுக்கு பயன்படும் பொருக்கட்டட மாக மாற்ற சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

கம்பைநல்லூர் பஸ் ஸ்டாண்ட் அருகே பூட்டி கிடக்கிறது பிஎஸ்என்எல் அலுவலகம்.

தினமலர்
உங்கள் வீடு தேடி வர
98651 70781

பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
குந்தாரப்பள்ளி கிளை
ராமாபுரம் அஞ்சல், கிருஷ்ணா நகர், கிருஷ்ணகிரி - 635 115.
போன் : 04343-242427, Email: kundar@bankofbaroda.com, Web : bankofbaroda.bank.in

(loanKnet போர்டலில் நடந்தப்படும் ஏலத்திற்கான செய்திக்குறிப்பில் வெளியிடப்படும் கருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை I/-யின்படி (விதி 8(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 8(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் வலுக்கும் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் " என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேப்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், வேலணித் தொகை மற்றும் ஏல அதிகாரிப் தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

திரு. T M வேல்குமார் த/பெ. T. முனிராஜ், கதவு எண். 3/94, சமத்தமலை கிராமம், குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி-635 115. ஜாமீன்தாரர் : திரு. T M ராஜு த/பெ. T. முனிராஜ், கதவு எண். 3/94, சமத்தமலை கிராமம், குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி-635115.

1. Term Loan A/c.No.18170600010131, நிலுவை தொகை ரூ.**10,83,011.05/-** மேலும் 17.02.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
2. Term Loan A/c.No.18170600010515, நிலுவை தொகை ரூ.**3,00,197.51/-** மேலும் 17.02.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

17.02.2026 அன்று மொத்த நிலுவைத் தொகை ரூ.**13,83,208.56/-**

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் விலைவங்கங்கள் இருப்பின்

கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி இனை I சார் பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுக்கா, குந்தாரப்பள்ளி, சமத்தமலை கிராமம், குந்தாரப்பள்ளி வருவாய் கிராமம் பழைய நத்தம் சர்வே ரெ.326/2, நத்தம் புதிய துணை பிரிவு சர்வே ரெ. 414/23, அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் உட்பட **தரங்கு எல்லைகள்:** வடக்கு திரு. T.முனிராஜ் வீடு, தெற்கு திரு. முனுசாமி வீடு, கிழக்கு திரு. ராகவேலம் வீடு மற்றும் பொது சாலை, மேற்கு: சாமுண்டி அம்மன் கோயில் நிலம். அளவுகள்: கிழக்கு மேற்காக 33 ¾ அடி, தெற்கு வடக்காக 33 ¾ அடி இதன் மொத்தப் பரப்பளவு 1139.06 சதுரடிகள். இந்த சொத்தானது திரு. T M வேல்குமார் பெயரில் உள்ளது. சமத்தமலையின் கிராம பஞ்சாயத்து மற்றும் வேப்பனப்பள்ளி ஒன்றிய கவுன்சில் எல்லைக்கு உட்பட்டது.

சுவாதீன நிலை : ஆக்கபூர்வ நிலை

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 29,00,000/-	டேவணித் தொகை	ரூ. 2,90,000/-
ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-	மின் ஏல தேதி மற்றும் நேரம்	27.03.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 25.02.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 26.03.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.in/e-auction மற்றும் BaankNet.com என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருவதைரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9487451022 & 95150 24578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 21.02.2026
இடம் : குந்தாரப்பள்ளி

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர் / பேங்க் ஆஃப் பரோடா